**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ஆம் நாள் திங்கட்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. க.இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 508/2018** பி.சா. 2 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வெங்கடேசன் | **வயது** | : | 47 |
| **த.பெ** | : | பாண்டுரங்கன் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | மண்டகொளத்தூர் | **தொழில்** | : | விவசாயம் |

**19.01.2026 –பி.சா. 2 குறுக்கு விசாரணை**

1)வாதி மணி எங்கள் மீது 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 124/2018 வழக்கில் வாதி என் தந்தை பாண்டுரங்கன் அவர்கள் மீது மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 508/2018 வழக்கில் வாதி என் தந்தை மற்றும் என் சகோதரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது தந்தை வழக்கு சர்வே எண்ணில் கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். என் தந்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். என்ன தேதியில் எப்போது கிரையம் பெற்றார் என்றால் 2000 த்தில் கிரையம் பெற்றார், தேதி, மாதம் தெரியாது.

2) எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்று தெரியுமா என்றால் எனக்கு கவனமில்லை. மணி அவர்கள் வழக்கு சர்வே எண் 17/1 பில் 67 ½ செண்ட் கிணறு பம்புசெட்டில் பொதுவில் பாதி பாகம், சர்வே எண் 17/2 பி 2 ல் 47 செண்ட் மற்றும் சர்வே எண் 24/7 பி-ல் 47 செண்ட் என்று மொத்தமாக 1 ஏக்கர் 62 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. என் ந்தை வழக்கு சஎர்வே நெமப்ரில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு கிரையம் பெற்றார் என்ற விவரத்தை என் முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அதேபோன்று கிருஷ்ணமூர்த்தி அவர்கள் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்ற நான் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவிக்கவில்லை. நான் மண்டகொளத்தூரில் தான் வசித்துவருகிறேன்.

3)வழக்கு சொத்து நாங்கள் கிரையம் பெற்றதாக கூறும் சொத்தும் ஆதியில் அல்ராஜ் மந்திரி மற்றும் அவரது மனைவி தனமதி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அல்ராஜ் மந்திரி மற்றும் அவரது மனைவிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அல்ராஜ் மந்திரி மற்றும் அவரது மனைவிக்கு எத்தனை பிள்ளைகள் என்று முதல்விசாரணையிலும் நான் கூறவில்லை என்றால் கூறவில்லை. வாதி என் தந்தை கிரையம் பெறுவதற்கு முன்பே வழ்ககு சர்வே நெம்பரில் கிரையம் பெற்றவிட்டார்என்றால் சரியல்ல. என்

தந்தை 2000 த்தில் கிரையம் பெற்றார் என்று நான்கூறுகிறேன், ஆனால் மணி அவர்கள் 1992 ல் வழக்கு சர்வே நெம்பரில் கிரையம் பெற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை கிரையம் பெறுவதற்கு முன் 8 வருடங்களாக வாதி அனுபவத்தில் இருந்தார் என்றால் கிடையாது.

4)வழக்கின் சர்வீஸ் நெம்பர் 84 யார் பேரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது, (சாட்சி தற்போது ஏழுமலை பெயரில் உள்ளது என்று கூறுகிறார்.) ஏழுமலை யார் என்றால் எனக்கு அவர் தந்தை பெயர் தெரியாது, ஆனால் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். ஏழுமலை எப்போது எவ்வளவு விஸ்தீரணம் கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு அது தெரியாது. அல்ராஜ் அவர்களின் மகன்கள் நாராயணசாமி, கிருஷ்ணன், கண்ணன், மற்றும் ஏழுமலை என்றால் எனக்கு தெரியாது. இவர்களில் நாராயணசாமி இறந்தபிறகு கூட்டுகுடும்ப சொத்திற்காக ஏழுமலையின் பெயரில் மின்இணைப்பு பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

5)ஆகையால் மின்இணைப்பு மேற்படி அல்ராஜ் மகன்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது சர்வீஸ் நெம்பர் யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பெயரில் உள்ளது. என் தந்தை பெயரில் சர்வீஸ் நெம்பர் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு நிலுவையில் இருக்கும் போது சர்விஸ் நெம்பரானது என் தந்தை பெயரில் மாற்றப்பட்டதால் அதை மீண்டும் கிருஷ்ணமூர்த்தி பெயருக்கு மாற்றம் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. ஆகையால் என் தந்தை பெயரில் தற்போது மின்இணைப்பு உள்ளது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதிகமான அவருக்கு உரிமை இல்லாத சொத்தை என் தந்தைக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

6)கண்ணன் மற்றும் அவர்கள் மைனர் பிள்ளைகளிடமிருந்து கிருஷ்ணமூர்த்தி அவர்கள் **பி.சா.ஆ-2** ஆவணத்தின் முன்னிலைக்கு 87 செண்ட் தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. ஏழுமலை மற்றும் அவர் மைனர் பிள்ளைகளிடமிருந்து கிருஷ்ணமூர்த்தி அவர்கள் **பி.சா.ஆ-3** ஆவணத்தின் முன்னிலைக்கு 1 ஏக்கர் 6 செண்ட் தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் தந்தை கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து 1 ஏக்கர் 98 செண்டை **பி.சா.ஆ-1** ஆவணத்தின் முன்னிலைக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கண்ணன் மற்றும் ஏழுமலை வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தின் 21 செண்டை கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சரோஜா அவர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அது வேறுசொத்தாகும்.

7)உரிமை இல்லாத சொத்தில் உரிமை இல்லாத விஸ்தீரணத்தை என் தந்தை கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதி அவர்கள் அல்ராஜ் மற்றும் தனபதி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அவர்களின் மகன்களான கிருஷ்ணன் பாகத்தையும், நாராயணசாமி பாகத்தையும் வாதி மணி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வாதி மணி சட்டப்படியாக சரியாக கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், நானும் என் தந்தையும் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளித்திருக்கிறோம் என்றால் சரியல்ல.

வாதி தாக்கல் செய்த வழக்கில் வழக்கு சொத்து முறையாக கிரையம் பெற்று தாக்கல் செய்துள்ளதால் வாதிக்கு இந்த வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.01.20 12:58:06 +0530

District Munsif,
Polur.